# கா. சிவத்தம்பி

2062
Public LIBRARY JAFFNA.

# இலக்கியத்தில் முற்போக்கு வாதம்

சிந்தனைச்சுட

பாட்டாளிகள் வெளியீ

JPL
C2062

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைச் சுடர்

KOHA
JDL

10840

மூர் வீதி கிளை நூலகம்
யாழ். மாநகர சபை
யாழ்ப்பாணம்

# இலக்கியத்தில் முற்போக்குவாதம்

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

# இலக்கியத்தில் முற்போக்குவாதம்

கா. சிவத்தம்பி

2062

பாட்டாளிகள் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தனைச் சுடர்......1

Sparks of Thought......1

July 1978

ILAKKIYATTIL MURPŌKKU VĀTAM
Progressivism in Literature
—A Monograph

10840

*by*

Karthigesu Sivathamby, M. A., Ph. D.
Associate professor of Tamil,
University of Sri Lanka.

விலை: ரூபாய் ஒன்று

894.8114

*Publishers:*
PAATTAALIKAL VELIYEEDU
42, Narayanappa Naicken Street,
Madras—600021

Printed at:
Moovendar Achagam
Madras-600014

வகுப்பு 894.8114
வரவு பதிவு 10840
மட்டை கட்டிய திகதி
மறுமட்டை திகதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10840

KOHA-JPL

# பதிப்புரை

கட்டுரைகள் தொகுதிகளாக வெளிவருவது இன்றைய தமிழ்ப் பிரசுர மரபின் ஓர் அம்சமாகிவிட்டது. ஆனால் விரிவான தனி ஆராய்ச்சிக் கட்டுரைகள் சிறு நூல்களாக வெளியிடப் பெறும் மரபு இன்னும் தமிழ்ப் பிரசுர மரபில் தோன்றத் தொடங்கவில்லை.

தனியொரு சிந்தனைபற்றி எழுதப்பெறும், நூலளவு பெரிதல்லாத கட்டுரைகளைத் தனிப் பிரசுரங்களாக வெளியிடும் வழக்கம், 1930களில், சுதந்திரப் போராட்ட காலத்தின் அறிவியக்கத்தின் ஓர் அம்சமாக இருந்தது. அத்தகைய பிரசுரங்கள் ஏற்படுத்திய தாக்கத்திற்கு சக்தி பிரசுரங்கள் சில, அல்லயன்ஸ் பிரசுரங்கள் சில சான்று.

41677

மாறி வரும் பாரதத்தின் வழிகளைப் பற்றிய அறிவியக்கங்கள் வன்மையுடன் தொழிற்படும் இக்கால கட்டத்தில், அத்தகைய பெருங்கட்டுரை நூல்களுக்கு ஓர் அறிவுத் தேவை காணப்படுகின்றது. நூலின் பக்க அளவு கொண்டல்லாது, சிந்தனைத் தாக்க அளவு கொண்டு பார்க்கும் பொழுது தனியே உய்த்தறிந்து கொள்ளப்பட வேண்டிய சிந்தனைகளை, அத்தகைய சிந்தனைகள் பற்றிய ஆய்வுகளை, தனிச்சிறு நூல்களாக வெளியிடுவது எழுத்தறிவு வளர்ச்சியின் இன்றைய மட்ட நிலையில் அத்தியாவசிய, தேவையெனப் பாட்டாளிகள் வெளியீடு கருதுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை, இலக்கியம், விஞ்ஞானம் முதலிய துறைகள் யாவுமே, மனித வாழ்வியலின் பாற்பட்டவையே. இந்த வாழ்வியலை—வாழ்க்கை நெறியை—விளக்கும், அல்லது விமர்சிக்கும் புதிய சிந்தனைகளைப் பெருங்கட்டுரைச் சிறு நூல்களாக வெளியிடுவதன் மூலம், தமிழ்கூறும் நல்லுலகத்தின் ஓர் அறிவுத் தேவையைத் பூர்த்தி செய்யலாமென்பது எமது எண்ணத் துணிபு.

இந்த எண்ணத் துணிபின் செயல் நிலைப்பரிணாமிப்புத்தான் சிந்தனைச் சுடர் எனும் இவ்வரிசை.

சிந்தனைச் சுடர் வரிசையில் வெளிவருவன துண்டுப் பிரசுரங்களன்று. ஒரு பொருள் பற்றிய தனிச்சிறு நூல்களே. (Monographs).

இவ்வரிசையின் முதற் பிரசுரமாக கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் எழுதியுள்ள **இலக்கியத்தில் முற்போக்கு வாதம்** எனும் இச்சிறு நூல் அமைகின்றது.

**பாட்டாளிகள் வெளியீடு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

# முன்னுரை

கோயம்புத்தூரில் அண்மையில் நடைபெற்ற தமிழ் நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் இரண்டாவது மாநில மாநாட்டில், "இலக்கியத்தில் முற்போக்கு வாதம்" என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றும் வாய்ப்புக் கிடைத்தது.

அச்சொற் பொழிவினைச் சிறு நூலாக வெளியிட வேண்டுமென நண்பர் இரா. பாண்டியன் விரும்பினுர். மற்றைய நண்பர்கள் பலரும் அவ்விருப்பம் பூர்த்தி செய்யக்கூடிய அறிவுத் தேவைபற்றி வற்புறுத்திக் கூறினர். அவற்றின் பலனுக இந்நூல் தயாராகியுள்ளது.

தாம் தொடங்கும் புதிய பிரசுர வரிசையின் முதல் நூலாக இதனை நண்பர் பாண்டியன் வெளியிடத் தீர்மானித்துள்ளமை, எனக்கு அவர் பாலுள்ள அன்புக் கடப்பாட்டினை மேலும் அதிகரிக்கின்றது. அவருக்கு என் நன்றிகள்.

கோயம்புத்தூர் மாநாட்டில் நான் இச் சொற்பொழிவினை ஆற்றல் வேண்டுமெனக் கருதிய, கருதிய வாறே ஒழுங்குகள் செய்த திருவாளர்கள் கே.முத்தையா, ச. செந்தில்நாதனுக்கு என் மனமார்ந்த நன்றிகள்.

தமிழில் முற்போக்கு வாதத்தின் தோற்றம் வளர்ச்சி பற்றி நீண்ட கல்வி நிலைப்பட்ட ஓர் ஆய்வு மேற்கொள்ளப்படுவது அவசியம். ரகுநாதனின் இலக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கியப் புலமையினையும், நா. வானமாமலையின் ஆராய்ச்சிப் புலமையினையும் இணைத்து விளங்கிக் கொள்வதற்கு இத்தகைய ஓர் ஆய்வு முறை அவசியமாகின்றது. திரு. வி. க முதல் வெ. சாமிநாத சர்மாவரை, வெ. சாமிநாத சர்மா முதல் எஸ். ராமகிருஷ்ணன், நா. வானமாமலை வரை வரும் ஆய்வு அறிவியலாக்கங்களையும், பாரதி முதல் ரகுநாதன்வரை, ரகுநாதன் முதல் மேத்தா, புவியரசு, தணிகைச் செல்வன் வரை வரும் கவிதா சிந்தனைகளையும் — சிந்தனைக் கவிதைகளையும்; பஞ்சும் பசியும் முதல் தாகம், மலரும் சருகும், தேனீர் வரையுள்ள நாவலிலக்கியங்களையும், விளங்கிக் கொள்வதற்கு, முற்போக்கு இலக்கிய மரபு தமிழகத்தில் தொழிற்பட்ட முறைமையினை ஆராய்வது அத்தியாவசியமாகும். ஈழத்தின் இலக்கிய வரலாற்றில் இவ் வியக்கத்தின் தோற்றம் வியாப்தியினை சிறிது ஆராய்ந்தவன் என்ற வகையில் தமிழகத்து இலக்கிய வரலாற்றின் மேற்கூறிய தேவையினை வலியுறுத்திக் கூறவே விரும்புகின்றேன்

களம், காலம் பற்றிய ஆய்வுகள் தனித்தனியே பிரதேச அடிப்படையில் வந்து கொண்டிருக்கின்றனவெனினும், தமிழ் இலக்கிய முழுமை பற்றிய தர உணர்வுடன் சிந்தனையொருமையுடன் நோக்கும் பொழுது தமிழ் இலக்கியம் நாடு வாரியாகவோ, கருத்து வாரியாகவோ பிரிக்கப்படக்கூடியதன்று. அது முழுமையானது. அமெரிக்க, பிரித்தானிய, ஆஸ்திரேலிய, ஆபிரிக்க, இந்திய இலக்கிய வெளிப்பாடுகள் யாவுமே ஆங்கில இலக்கியங்கள்தான். ஆங்கில இலக்கியத்தின் முழுமையும் பொதுமையும் பற்றிய ஆய்வுகள் நாடுகளை ஊடறுத்துச் செல்வனவாக, ஆங்கில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியத்தின் சர்வதேசியத்தை வற்புறுத்துவனவாக அமைகின்றன.

தமிழின் உலகப் பெருமையை வற்புறுத்துவோர், அப்பெருமை இன்றைய உலகில் அதன் சர்வதேசியத்திலேயே தங்கியிருக்க முடியுமென்பதை அறியத் தவறுகின்றனர். பல்வேறு தேசிய மட்டங்களில் பயிலப்படும் தமிழ் இலக்கியத்தின் சர்வதேசியப் பொதுமையை எடுத்துணர்த்தும் வகையில், தமிழ் இலக்கியத்தின் முற்போக்கு வாதத்தின் செல் நெறிகளும செல்வாக்குகளும் அமைந்துள்ளன. தமிழின் பூர்வீக தனித்துவத்திலேயே அதன் பெருமைகள் யாவற்றையும் கண்டு கொள்ள வேண்டுமென்று 'நான்று கொண்டு நிற்காது' அதன் சம காலச் சர்வதேசியத்திலும் அதன் பெருமைகளைக் காணல் வேண்டும், நிலை நிறுத்தல் வேண்டுமென விரும்புவது நல்லது. இலக்கியச் சர்வதேசியத்திலே தான் இலக்கியங்களின் முழுமையும் தரமும் இன்றைய நிலையில் தீர்மானிக்கப்படுகின்றன; மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதில் அல்ல.

இலக்கியத்திலே முற்போக்குவாதம் என்னும் இச் சிறு நூல் அத்தகைய சிந்தனைச் சுடர்களை வெளிக் கொணர முடியுமெனில்,—சிந்தனைப் பொறிகளைத் தானும் வெளிக் கொணருமெனில்— நண்பர் பாண்டியனும நானும் இப்பிரசுரம் பற்றிக் கொண்டுள்ள எதிர் பார்ப்புகள் வீணபோகா.

நடராஜ கோட்டம்
வல்வெட்டித்துறை
1—7—78

கார்த்திகேசு சிவத்தம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41077

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

# இலக்கியத்தில் முற்போக்கு வாதம்

## தோற்றுவாய்

தமிழ்நாடு மாநிலத்தின் "முற்போக்கு எழுத்தாளர்கள்" குழுமியுள்ள இம் மாநாட்டில், இவ்விடயம் பற்றி ஆராய்வது மிகப் பொருத்தமானதாகும். ஏனெனில் "முற்போக்கு" எனும் சொல்லின் கருத்துப்பற்றி, கருத்து மயக்கங்கள் பல நிலவுவதை நாம் காணலாம். உதாரணமாக, முற்போக்கு எழுத்தாளர் அல்லாதவர்களின் "தத்துவம்" எத்தகையது என்பது பற்றி அதனை எவ்வாறு எடுத்துக் கூறலாம் என்பது பற்றிப் பலவித கருத்து வேறுபாடுகள் நிலவுவதைக் காணலாம். மேலும் " முற்போக்கு" எனும் சொல் அவ் வாதத்தினை, மேற்கொண்டுள்ளவர்களாலும், அதனை எதிர்ப்பவர்களாலும் பலவித துஷ்பிரயோகம் செய்யப்படுவதையும் காண்கின்றோம். முற்போக்கு வாதிகளால்லாதோர், 'நாம் பிற்போக்குவாதிகளா?" என்று கேட்பதுவும், முற்போக்கு வாதிகள் முற்போக்கு வாதம் பற்றிக் கொடுக்கும் வரைவிலக்கணங்களும் இச்சொல் தெளிவற்ற பிரயோகத்திற்கு இடமளிப்பதனை எமக்குக் காட்டி நிற்கின்றது.

"இலக்கியத்தில் முற்போக்கு வாதம்" எனும் இத் தலைப்பு, இரு முக்கிய துறைகளைத் தன்னுள் அடக்கி நிற்கின்றது.

i. இலக்கியம்

ii. முற்போக்கு வாதம்

இங்கு இலக்கியத்தின் பண்பையும் பயனையும் "முற்போக்கு வாதம்" எனும் தொடரின் கருத்தைத் தீர்

நூலகம்
யாழ் ... சபை
யாழ்ப்பாணம்
பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானித்து நிற்பதாலும், எழுத்தாளர்கள், விமரிசகர்கள் என்ற வகையில் "இலக்கியம்" பற்றிய ஏதோ ஒரு உணர்வும், தெளிவும் இங்கு குழுமியுள்ளோரிடையே எதிர்பார்க்கப்படுவதாலும், முதலில் முற்போக்கு வாதம் பற்றியும் அடுத்து இலக்கியம் பற்றியும், இறுதியாக இவை இணையும் பொழுது ஏற்படும் நிலை பற்றியும் ஆராய்ந்தறிந்து கொள்ளலாமென எண்ணுகிறேன்.

முற்போக்கு வாதத்தையும், இலக்கியத்தையும், தனித்தனியேயும், இணைத்தும் நோக்குவதும், அந்த இணைப்பினால் ஏற்படும் எதிர்பார்ப்புக்கள் தாக்கங்கள் பற்றி அறிந்து கொள்வதும், இலக்கியம் பற்றிச் சிரத்தையுடைய எழுத்தாளர், வாசகர், விமரிசகர் ஆகிய மூவருக்கும் அத்தியாவசியமானதாகும்.

## முற்போக்கு—சொல் விளக்கம்

"முற்போக்கு" எனும் இச்சொற்றொடர் ஆங்கிலத்தில் வரும் "Progressive" எனும் பதத்தின் மொழி பெயர்ப்பாகும். இச்சொற்றொடர் தமிழ் வரலாற்றினடியாகவோ, தமிழர் வரலாற்றினடியாகவோ முகிழ்த்தெழும்பிய ஒரு பிரயோகம் அன்று. இது மேனாட்டுச் சிந்தனை வழியாக வந்ததாகும். இதன் காரணமாக, Progressive (புரொகிறெசிவ்) எனும் பதத்திற்கு மேனாட்டுச் சிந்தனை மரபில், எவ்வெக் கருத்து இணைவுகள் சேர்க்கைகள் உண்டோ, அவை யாவும் இத்தமிழ்ப் பதத்தினுள்ளும் திணிக்கப்பட்டுள்ளமையை நாம் அறிந்து கொள்ளலாம். மொழிபெயர்ப்புத் தொடர்கள் இத்தகைய பொருளில் பயன் படுத்தப் படுவதனை மொழி பெயர்ப்பியலில் "மாற்றீடு" (Transference) எனக் குறித்தல் வேண்டுமெனக் கற்ஃபோட் (Catford) என்பார் கூறுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA-JDL



முற்போக்கு எனும் சொற்றொடரின் கருத்து முனைப்பான பிரயோகம், அரசியற்றுறையிலும் சமூகத் துறையிலுமே பெரிதும் காணப்படுவதனை நாம் காணலாம். உதாரணமாக, அரசியற்றுறையில் நாம் ஒருவரது கருத்துக்களினை விவரிக்கும் பொழுது "இது முற்போக்கான ஒரு சிந்தனை" என்று கூறப்படுவதனைப் பல சந்தர்ப்பங்களிலே காண்கின்றோம். அது மாத்திரமல்லாது, சமூக நிலையில், ஒருவர் குறிப்பிட்ட சில சமூக வாழ்க்கை நிலைகளில் மேற்கொண்டிருக்கும் கண்ணோட்டம் நடைமுறை காரணமாக அவர் "முற்போக்கானவர்" என்று குறிப்பிடப் பெறுவதையும் இன்றைய பேச்சு வழக்கில் காணக் கூடியதாகவுள்ளது.

இவ்வாறு நோக்கும் பொழுது, "முற்போக்கு" என்னும் சொற்றொடர், சமூக நிலைப்பட்ட வாழ்க்கை பற்றிய ஒரு கருதுகோள் என்பது தெரியவரும்.

இதனைச் சிறிது ஆழமாக நோக்குதல் அவசியமாகின்றது' "சமூக நிலைப்பட்ட வாழ்க்கை" என்னும் பொழுது நாம் எதனைக் கருத்திற் கொண்டுள்ளோம் என்பதனைத் தெளிவுபடுத்திக் கொள்ளுதல் அவசியமாகின்றது.

சமூகம் சம்பந்தமாக மனிதன் ஒருவன் மேற்கொள்ளும் கருத்தே அவனை முற்போக்கு வாதியாக ஆக்குகின்றது. என்பது அடிப்டைத் தரவு ஆகின்றது. ஆனால் இவ்வடிப்படைத் தரவே முற்போக்கினை விளக்கிவிடாது. ஏனெனில் உலகத்தில், மனித சமூகத்தில். மனிதச் சமூகங்களில் வாழும் ஒவ்வொருவருமே, பிரக்ஞை பூர்வமாகவோ அவ்வாறில்லாமலோ, சமூக உறவு பற்றிய கண்ணோட்டமுடையவர்களாகவே காணப்படுவர்.

3234 M
10840
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
பொது சன நூலகம்

எனவே முற்போக்கின் 'தனித்துவத்தை'த் தீர் மானிப்பது, அது எத்தகைய சமூகக் கண்ணேட்டம் என்ற வினுவிறகான விடையேயாகும். சமூகத்தின் அல்லது சமூக நிலைமையின் அல்லது சமூக வளர்ச்சிப் படியின் ஒரு நிலையிலிருந்து இன்னெரு படிநிலைக்கு இருப்பதிலும் பார்க்க உயர்ந்தது என்று கருதப்படத் தக்க ஒரு படிநிலைக்குச் செல்வதனையே நாம் முற்போக்கு வாதம் எனக் கொள்கிருேம் என்பது புலனுகின்றது.

இவ்வாறு சொல்லும் பொழுது, முற்போக்கு வாதம் இருக்கும் நிலையின் தொடர்ச்சியை அன்றேல் தேக்க நிலையை ஏற்றுக் கொள்வதில்லை என்பதும் தெரிய வரு கின்றது. அது மாத்திரமல்லாது, கால அடிப்படையில் முன்னர் நிலவிய ஒரு இருக்கை நிலக்கு மீண்டும் போவதை, அந்நிலையை மீண்டும் நிலைநிறுத்துவதை முற்போக்குவாதம் ஏற்றுக் கொள்வதில்லை யென்பதும்; வளர்ச்சியினடியாக ஏற்படும் ஒரு புதிய கட்டத்திற்குச் செல்வதையே இவ்வாதம் குறிக்கின்றதென்பதும் தெளி வாகின்றது;

இவ்வாறு கூறும் பொழுது, உலக வளர்ச்சி முன்னேற்றம் பற்றி முற்போக்கு வாதம் கொண்டுள்ள முக்கியமான கருத்துப் புலப்படுகின்றது. முற்போக்கு வாதம் உலக இயக்கத்தை—உலக வளர்ச்சியை—சுழல் வட்டமாக—மீண்டும் மீண்டும் வருவதாகக் (Cyclic) கொள்ளாமல் நேர்க்கோடான வளர்ச்சியுடையதாகவே (Unilinear) கொள்கின்றது. முற்போக்குவாதம் பற்றிய இக்கருத்துத் தெளிவு, இந்தியப் பெரும் பாரம்பரியத்தில் வாழும் எமக்கு ஏற்படுவது அத்தியாவசியமாகும். வாழ்க்கையை ஒரு சுழல் வட்டமாகக் கொள்ளும் எமது நம்பிக்கைகளுக்கு இது மாருனதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA



சுழல்வட்டக் கோட்பாட்டினை அடிநிலையில் நிராகரிக்கும் அதே வேளையில், மனித சமூக வாழ்க்கையின் ஒவ்வொரு படிநிலையும், ஒன்றைவிட மற்றது சிறந்தது முன்னேற்றமானது என்னும் கருத்தை முறபோக்கு வாதம் உள்ளடக்கி நிற்கின்றது. இக் கருதுகோளினை முற்போக்குவாதத்தின் அச்சாணியான கோட்பாடு என்று கருதுதல் வேண்டும். மனிதவளர்ச்சியின் இன்றைய நிலையும் இனிவரும் நிலையும் மனித முன்னேற்றப் படிகளே என்பது இவ்வாதத்தின் உட்கிடக்கையாகும்.

மனிதனது வாழ்க்கை, மனிதத்துவத்தின் பூரணத் துவ'த்தை வெளிக் கொணருவதற்கான, ஒருபயணம் என்பதும், அப்பயணத்தின் பல்வேறு படிநிலைகள் அப் பூரணத்துவத்தின் படிநிலைகளே என்பதும் இவ்வாதத் தின் முக்கிய எடுகோள் (premise) என்பதனை நாம் திட்டவட்டமாக விளங்கிக் கொள்ளுதல் அத்தியாவசிய மாகும்.

முற்போக்கு வாதம், மனித வளர்ச்சியினை, மனித ஆற்றலின் வளர்ச்சியை, மனிதாயத்தின் வளர்ச்சியினை உள்ளடக்கி நிற்கும் ஒரு வாதம் என்பது இதுவரை கூறியவற்றுற் புலனுகின்றது.

இக் கட்டத்திலே நாம், வளர்ச்சி பற்றிய சில தப்பபிப்பிராயங்களை நீக்கிக் கொள்ளுதல் அத்தியாவசிய மாகும். உலகில் நடக்கும் எல்லாச் செயல் நிகழ்வுகளுமே முன்னேற்றத்தினை மனித முற்போக்கு வளர்ச்சியினைக் குறிக்கா. சில அபிவிருத்திகள் (developments) முற் போக்கினைக் கொண்டு வராது, சிதைவினை ஏற் படுத்தும் நடைமுறைகளாகவும் அமையலாம். சில நடைமுறைகள் மனித முன்னேற்றத்தினைத் தடை செய்பவையாக, மனிதாயுதச் சிதைவினை ஏற்படுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவையாக அமையலாம். இதற்கான உதாரணங்கள் பலவற்றை நாம் உலக வரலாற்றிலே கண்டு கொள்ள லாம்.

இத்தகைய ஒருநிலையில், முற்போக்கு என்பது எத்தகைய அபிவிருத்திகளுடன் சம்பந்தப்பட்டது எனும் வினு எழுவது இயல்பே.

எந்த ஒரு அபிவிருத்தி. ஏற்கனவே நடந்தேறிய வற்றின் தொடர்ச்சியைப் பேணி, ஏற்கனவே நிலை நிறுத்தப்பட்ட சாதனைகளை—பெறப்பட்டனவற்றை— புதிய சூழ்நிலைக்கேற்ப இயைபுடையனவாக்கி தர அடிப்படையில் புதியனவாகக் கொள்ளப்படத்தக்க அமிசங்களைக் கொண்டுள்ளதோ, (அதாவது தரரீதியில் உயர்ந்ததாக அமைகின்றதோ) அந்த அபிவிருத்தியே முற்போக்குடன் சம்பந்தப்பட்டது—முற்போக்கானது- என்பதனை நாம் ஐயந்திரிபற அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

இக் கூற்றினைச் சிறிது விவரமாகவே நோக்கலாம். 'ஏற்கனவே நடந்தேறியவற்றின் தொடர்ச்சி' எனும் பொழுது மரபு, புதிதாக்கம் (tradition and innovation) என்பவை பற்றிப் பேசப்படுதல் அத்தியாவசியமாகின்றது. காலமும், இடமும் திரிந்தவிடத்து திரிந்தவற்றுக்கேற்ப அமைத்துக் கொள்ளும் முறைமையே மரபு எனத் தொல்காப்பிய உரையிற் பேராசிரியர் கூறியதனை இங்கு நாம் மனங் கொளல் வேண்டும். பழமையைப் பேணவிரும்பும் ஒரு கண்ணோட்டம் இருக்கும் நிலையை மேலும் வறிதாக்கும் ஒரு செயல் நிலைக்கு இடம் கொடுக்கலாம் மரபு வாதம் பழைமை பேண் வாதமாக மாற இடம் கொடுத்தலாகாது அடுத்து, 'தரத்தில் உயர்ந்தனவான புதியஅமிசங்களை

10840
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வபிவிருத்தி கொண்டிருத்தல் வேண்டுமெனச் சொல்லும் பொழுது, மனித வாழ்க்கையின் ஆத்மார்த்த அறிவு நிலைப்பட்ட, அரசியல் சார்ந்த, பொருளியலுடன் சம்பந்தப்பட்ட மாற்றங்கள் தரஉயர்ச்சியினைத் தருவனவாக அமைதல் வேண்டுமென்பது புலனாகின்றது. இத் "தர உயர்ச்சி" மனிதப் பொதுமையை, மனித ஆற்றலை, மனிதாயுதத்தை நிலை நிறுத்துவதிலும் எடுத்துக் காட்டுவதிலுமுள்ள தர உயர்ச்சியினையே கருதுகின்றது என்பது சொல்லாமலே விளங்கும்.

இவ்வாறு நோக்கும் பொழுது, முற்போக்கு வாதம் என்பது சமூக வளர்ச்சி பற்றிய அறிவியல் நிலைப்பட்ட ஒரு கண்ணோட்டத்திலிருந்தே தோன்ற முடியுமென்பதும் அந்த அறிவியற் கண்ணோட்டம் மனித வாழ்க்கையின் களமும் தளமுமான சமுதாயம் பற்றி, அதன் வளர்ச்சி பற்றிய ஒரு விதியின் பாற்பட்டதாக அமைய வேண்டுமென்பதும் புலனாகின்றது.

இதனை வேறொரு வகையாகவும் எடுத்துக் கூறலாம். சமூக வாழ்க்கை பற்றிய ஒரு விதிமுறையான ஒரு கோட்பாட்டினடியாகவே முற்போக்கு வாதம் தோன்றும். அத்தகைய ஒரு கோட்பாடு மனிதனுக்கும் அவன் சூழலுக்கும், சமூகத்துக்குமுள்ள உறவைத் தெளிவுபடுததுவதாக விருத்தல் வேண்டும். அத்தகைய பின்னணியில நோக்கும் பொழுதே எது முற்போக்கு என்பது பற்றிய ஒரு தெளிவு உண்டாகும். அதாவது முற்போக்கு வாதம என்பது அவ்வாதத்தினை மேற கொள்பவரிடத்தே உலகநோக்கு (World-view, welten schaung) ஒன்றினை ஏற்படுததும். அந்த நோக்கு அவரது சிநதனை நெறியை, செயற்படுமுறைமையைத் தீர்மானிக்கும்.



41077

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே அடுத்து நாம், மேலே கூறப்பட்டுள்ள பண்புகளைத் தன்னுள்ளடக்கிய சமுதாய வளர்ச்சி யாது என்பது பற்றிச் சிந்தித்தல் அவசியமாகின்றது.

**முற்போக்கு வாதம் சுட்டும் சமுதாய வளர்ச்சி விதி**

அவ்விதியை அறிந்து கொள்ள முனைவதற்கு முன்னர், அத்தகைய விதி எத்தகைய பண்பினை உள்ளடக்கியிருத்தல் வேண்டுமென்பதனை அறிந்து கொள்ளல் வேண்டும்.

முதலாவதாக அது உலகம் பற்றியும் அதன் இயக்கம் பற்றியும், மாற்றம் பற்றியும் ஏற்புடைத்தான விளக்கத்தைத் தருவதாக விருத்தல் வேண்டும்.

விதி வருமுறையிற் கொள்ளப்படும் அவ் விதி, உலகில் ஏற்கனவே நடந்தேறிய நிகழ்ச்சிகளை விளக்கு வதாகவும், நடந்து கொண்டிருப்பனவற்றுக்குப் போதிய விளக்கம் தருவதாகவும் நடக்கக் கூடியன பற்றிச் சுட்டுமுறையாற் காட்டத் தக்கதாகவும் இருத்தல் வேண்டும்.

இரண்டாவது-இது முதலாவதளவு முக்கியமானது; அது மனிதனை முதன்மைப் படுத்துவதாக அமைதல் வேண்டும். மனிதாயுதத்தின் பூரணத்துவத்தைப் பெறுவதும் நிலைநாட்டுவதும் முற்போக்குவாதத்தின் இயல் பானமையால் மனிதனை முதன்மைப் படுத்தாத, மனி தாயத்தினை வற்புறுத்தாத சமுதாய மாற்றம் வளர்ச்சி யாகாது என்பதனை நாம் நன்கு அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

மூன்றாவதாக, அவ்விதி உலகத்தை, உலக நடவடிக்கைகளை சமுதாயத்தை அதன் அமைப்பு, செயல் முறைகளை விளக்குவதாக மாத்திரமல்லாது, மனித ஆற்றலின் பூரண பொலிவையும் வெளிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொணரத்தக்க வாழிடமாக உலகத்தை மாற்றுவதற்குமான, அம் மாற்றத்துக்கான வழிமுறைகளைக் கூறுவதான ஒரு விதியாகவுமிருத்தல் வேண்டும்.

உலகில் இத்தகைய உலக விளககக் கோட்பாடுகள் உண்டா? மனித வாழ்க்கையையும் உலகையும், மனிதனை முதன்மைப் படுத்தி நோக்கி, மனித நல்வாழ்வுக்காக உலகத்தை மாற்றுவதற்கான விதி ஒன்று உண்டா? மனித வாழ்க்கை, அதன் பூரணத துவம் அதற்காகச் சமுதாயத்தை மாற்றல், அம்மாற் றத்தினைச் செய்யும் வழிமுறைகள் என்பனவற்றைப் பேசவேண்டிய அவ்விதி, மனிதனின் பொருளாதாரத் தேவைகளையும், அரசியலமைப்புக்களையும், சமூக உறவு களையும், பண்பாட்டுத் தோற்றத்தையும், பண்பாட்டு நிறுவனங்களையும், சுருக்கமாகச் சொன்னால் மனிதனின் ஆத்மார்த்த, சமூக, பொருளாதார அரசியல் வாழ்க்கை பற்றிய சகல அமிசங்களையும் மனித முதன்மை என்ற கட்டுக் கோப்புக்குள் வைத்து விளக்கு வதாக விருத்தல் வேண்டும்.

அத்தகைய ஒரு நோக்கினை தரும் முதன்மையான வாதம் மார்க்ஸீய வாதமேயாகும்.

மார்க்ஸீய வாதம் சமுதாய வளர்ச்சி பற்றிய அறிவியல் நிலைப்பட்ட விதிகளைத் தருவது இது உலக வரலாற்றினை மனித வாழ்க்கையினை விதி வருமுறை யாக ஆராய்ந்து, மீள் நோக்கில் உலக சமுதாய நிகழ்ச்சிகளின் இயைபான விளக்கங்களைக் கொண்டது என்று ஏற்றுக் கொள்ளப்படுவது. அதன் அச்சாணி யாக இரு கருதுகோள்கள் உள்ளன.

(i) வரலாற்றுப் பொருள் முதல் வாதம்

(ii) இயங்கியற் பொருள் முதல் வாதம்

பொது சன நூலகம் யாழ். மாநகர சபை யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றுப் பொருள் முதல் வாதக் கொள்கையின்படி சமுதாயத்தின் வளர்ச்சியில் சில உற்பத்தி முறைமைகள் ஒன்றன்பின் ஒன்ருக வருமென்பது மார்க்ஸ், ஏஞ்சல்ஸ் என்பாரது முடிபாகும். ஆனுல் இது, உலகப் பொதுவான முறையில் எல்லா நாடுகளிலும ஒரே முறையிலேதான் அமைய வேண்டுமென்பது தவருன ஒரு விளக்கம் என்பதனை இங்கு வலியுறுத்தல் அவசியமாகின்றது. இந்த உற்பத்தி முறைமை காரணமாகவும், உற்பத்தி முறைமைகள் மூலம் நிறுவப்படும் சமூக உறவுகள் மூலமும் சமூக—பொருளாதாரக் கட்டமைவுகள் (Socio-Economic formations) தோன்றுகின்றன. "ஒரு சமுதாயத்தின் பொருளாதாரக் கட்டமைவே குறிப்பிட்ட சமூகத்தினது உற்பத்தியுறவுகளினது முழுக் கூட்டுத் தொகையென நிறுவியதன் மூலமும் அத்தகைய கட்டமைவுகளின் அபிவிருத்தியானது வரலாற்றின் இயல்பான நடைமுறையென நிறுவியதன் மூலமும், மார்க்ஸ் சமூகவியலை வரன்முறையான விஞ்ஞான அறிவின் தொகுதியாக நிறுவினுர்" (லெனின்) சமூக பொருளாதாரக் கட்டமைவுகள் என்ற இக் கோட்பாடு, மக்கள் எவ்வாறு ஒன்றிணைக்கப்படுகிருர்கள் என்பதையும், அவ்வாறு ஒன்றிணைக்கப்படும் பொழுது அவர்கள் எவ்வாறு நடந்து கொள்கிருர்கள் என்பதையும், அந்நடத்தை முறைகள் சமூகத்தில் எவ்வகையில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றது என்பதையும் விளக்குகின்றது.

இயங்கியற் பொருள் முதல் வாதத்தில் வளர்ச்சியின் நடைமுறைகள், மனிதன் சிந்தனு பூர்வமாகவும் இயக்க பூர்வமாகவும் தொழிற்படுகின்ற முறைமை கூறப்படுகின்றது. ஒரு பொருளினை அது கொண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிருக்கும் உறவு நிலையில் வைத்து நோக்கி அதன் சிறப்புப் பண்புகளை அறிந்து கொள்வதும், அது மாறுகின்ற பொழுது, மாற்றத்தினால் ஏற்படும் உறவு மாற்றங்கள் சிந்தனை மாற்றங்களை ஏற்படுத்தும் முறைமை பற்றி அறிந்து கொள்வதும் இயங்கியற் பொருள் முதல் வாதத்தில் எடுத்துக் கூறப்படுகின்றது. ஒரு தரு நிலை (Thesis) யொன்றின் காரணமாக அதன் தொழிற்பாட்டின் காரணமாக எதிர் நிலை (Anti-thesis) யொன்று தோன்றுவதும், இவ்விரு நிலைகளின் தாக்கங்கள் ஊடாட்டங்கள் (interactions) காரணமாக முரண்பாடுகள் தோன்றுவதும், அம் முரண்பாட்டினடியாக ஒரு இணை நிலை (Synthesis) யேற்படுவதும், அந்த இணை நிலையே பின்னர் தரு நிலையாக மாறி மேலே கூறியவை தொடர்ந்து தொழிற்படுவதும் இவ்வாதத்தின் மூலம் புலப்படும். இந்த இயங்கு நிலை காரணமாக ஏற்படும் ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு புதிய பண்புகள்—தரநிலைப்பட்ட மாற்றங்கள் - ஏற்படுவதனை இயங்கியல் எடுத்துக் கூறும்.

இந்த இரு விதிகளின் இணைவு மனித முதன்மையுடைய மாற்றங்களை, மனிதப் பூரணத்துவத்திற்கான செல் நெறிகளை எடுத்துக் காட்டுவனவாக அமைகின்றன.

மனித வளர்ச்சி, வளர்ச்சி முறைமை பற்றிய இவ் வடிப்படை விதிகளை, மார்க்ஸீயம் கூறும் அரசியல் மாற்ற முறைகளை ஏற்காதவர்கள்கூட இன்று ஏற்றுக் கொள்கின்றனர். சமூக—பொருளாதாரக் கட்டமைவுக் கோட்பாடு (குலக்குழு வாழ்க்கை, நிலமான்ய அமைப்பு, முதலாளித்துவம், ஏகாதிபத்தியம் போன்றவை) இன்று சமூக விஞ்ஞானத் துறைகளில் மார்க்ஸீய எதிர்ப்பாளர்களினாலும் ஏற்றுக் கொள்ளப்படுபவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக இயங்கியல், வளர் நெறி பற்றிய இவ்விதிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் காரணமாகவே சமூகம், சமூக வாழ்க்கை பற்றிய ஆய்வுகளும், இரசாயனவியல், உயிரியல், பௌதிகவியல் போன்று அறிவுத் துறையாகப் போற்றப்படுகின்றன. இவ்வறிவியற்றொகுதியினை சமூக அறிவியல்கள் (Social Sciences) என்பர் வரலாறு, சமூகவியல், மானிடவியல் என்பன இன்று அவ்வாறே கற்றுக் கொள்ளப்படுகின்றன.

இந்நிலையில் சமூக விஞ்ஞானத் தொகுதியின் அச்சாணியான இவ்விதிகள் கண்டு பிடிக்கப்பட்டதற்கான இயக்கப் பின்னணியை அறிந்து கொள்ளுதல் அவசியமாகின்றது. மார்க்சும், ஏங்செல்சும் தாம் கொண்டிருந்த மனிதாபிமானம் காரணமாகவே, மனித வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதற்கெடுத்துக் கொண்ட சமூக இயக்கத்தேவைகளினடியாகவே இவ்விதிகளைக் கண்டறிந்து வரன் முறைப்படுத்திக் கொண்டனர். மேலும், சமுதாய மாற்றத்துக்கான, மனிதாபிமானப் போராட்டங்கள் நடத்தப் பெறும் பொழுதே இச்சமுதாய வளர்ச்சி விதிகளுக்கான விளக்கங்களும் பிரயோக முறைமைகளும் கண்டறிந்து கொள்ளப்பட்டன என்பதற்கு லெனினது வரலாறு சான்றாகும்.

எனவே மனித ஆற்றல், சுக வாழ்வு ஆகியவற்றுக்கான பூரண சாத்தியப் பாட்டினைப் பற்றிப் பேசும் முற்போக்குவாதம் இன்றியமையா நெறி முறையில் மார்க்ஸீயத்துடன் வந்து சங்கமிக்கும் நிலைமையினைக் காணலாம்.

## மார்க்ஸீயமும் முற்போக்கு வாதமும் ஒன்றா?

அவ்வாறாயின் மார்க்ஸீயமும் முற்போக்கு வாதமும் ஒன்றா எனும் வினா எழுதல் இயல்பே. முற்போக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதத் தோற்றத்திற்கான அடிப்படைச் சிந்தனை உந்துதல்களை நோக்கும் பொழுது, முற்போக்கு வாதம், மார்க்ஸீயம் கூறும் சமூக வளர்ச்சி விதிகளை ஏற்றுக் கொள்கின்றது என்பது தவிர்க்க முடியாத தத்துவ நிலைபாடாகும்.

எனவே இக்கட்டத்தில் நாம், மார்க்ஸீய வாதத்திற்கும் முற்போக்கு வாதத்திற்குமுள்ள வேற்றுமைகளை அடிப்படைத் தத்தவ ஒற்றுமையிருந்தும் அவற்றினிடையே காணப்படும் வேற்றுமைகளை அறிந்து கொள்வது அவசியமாகின்றது.

முற்போக்கு வாதம் பற்றிய இதுவரை வந்த எமது ஆய்வு, அது ஒரு சிந்தனைத் தெளிவு என்பதனை நிலை நிறுத்துகின்றது. மார்க்ஸீயத்தை விவரிக்கும் அறிஞர்கள் அதனை "அரசியல் நடவடிக்கைக்கான வழி காட்டி" அன்றேல் "அரசியல் நடவடிக்கைக்கான ஆற்றுப்படை" (Guide to Political ACTION) என்பர். மார்க்ஸீயத்தைத் திரிகரண சுத்தியாக ஏற்றுக் கொள்ளும் பொழுது, அவ்வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு உலகை மாற்றி மனித சமுதாயத்தின் முற்போக்குப் பாதையினை உறுதிப்படுத்தும் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் இயல்பாகின்றது. ஆனால் முற்போக்கு வாதம் பற்றிய எண்ணத் துணிபு நிலை அத்தகைய நேரடி நடவடிக்கை நிலையினைச் சுட்டி நிற்பதில்லை. மார்க்ஸீய வாதிகள் முற்போக்கு வாதிகளே. ஆனால் முற்போக்கு வாதிகளோ மார்க்ஸீய வாதம் நிலை நிறுத்தும் உலக மாற்றத்துக் கான அரசியல் மாற்றத்தினை நேரடி இயக்க முறைமைகள் மூலம் நிலை நிறுத்த முயலும் இயக்க வாதியாகத் தொழிற்படுவதில்லை. முற்போக்கு வாதம் பற்றிய எண்ணத் துணிபும் செயற்பாடும் ஒருவரை அதனைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்

பூரணமாக நடைமுறைப் படுத்தும் அரசியல் நடவடிக்கையாளராக மாற்றலாம். ஆனால் முற்போக்கு வாத நிலை அந்த நேரடி நடவடிக்கை நிலையினைக் குறிக்காது

அவ்வாறாயின் முற்போக்கு வாதத்தினை மேற்கொள்ளுபவரது சிந்தனைக் கடப்பாடுகள் யாவை என்பதை நாம் நிர்ணயித்துக் கொள்ளல் வேண்டும்.

முதலாவதாக, அவர் சமூக மாற்றம் பற்றிய கோட்பாட்டினை ஏற்றுக் கொள்பவராக இருத்தல் வேண்டும்.

இரண்டாவதாக, அம்மாற்றம், இருப்பதினும் பார்க்கச் சிறப்புடைய மனித நிலையினை ஏற்படுத்தும் என்ற எண்ணத் துணிபுடையவராக விருத்தல் வேண்டும்.

இது எண்ணத் துணிபு ஆக விருத்தல் வேண்டும். வெறும் நம்பிக்கையினடியாகத் தோன்றுவதாக விருத்தல் கூடாது

எண்ணத்துணிபு என்ற நிலையினடியாகவே மூன்றாவது அமிசம் தோன்றுகின்றது. அதாவது முற்போக்கு வாதம் மேற்கொள்ளப்படும் பொழுது அது சமுதாயத்தை ஓர் அசைவியக்கம் (Dynamics) கொண்ட ஒரு நிறுவனமாகக் கொண்டு, அதனை, அதன் அமைப்பினை, அதன் மேற் செலவினை விமர்சன பூர்வமாக விளங்கிக் கொள்வதாக விருத்தல் வேண்டும்.

இவ்வாறு நோக்கும் பொழுது, 'முற்போக்கு' என்பதனை, **'வரலாற்று இயங்கியல் நடை முறைகளினாலே தீர்மானிக்கப் பெறும் தரநிலைப்பட்ட மாற்றம்'** என வரையறுத்துக் கொள்ளலாம். முற்போக்குவாதி என்பவன் இத்தகைய மாற்றம் பற்றி எண்ணத் துணிபுடையவனே

இதன் காரணமாக முற்போக்குவாதியினிடத்து அறிவு பூர்வமான ஒரு "சமூக அர்ப்பண நிலை" (Social

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

dedication)யும், சமூகத்தின்பால் வரிப்புக் கடப்பாடும் (Social Commitment) காணப்படுமென்பது தெளிவாகின்றது.

## இலக்கியம்—பண்பும் பயனும் பற்றிய ஒரு விளக்கம்

அடுத்து, இப்பொருள் பற்றிய ஆய்வின் இரண்டாவது கட்டத்துக்கு வருகின்றோம். அதாவது, இது வரை நாம் ஆராய்ந்து, அறிந்துகொண்ட முற்போக்கு வாதத்துக்கும், இலக்கியத்துக்குமுள்ள தொடர்பினை அறிந்து கொள்ளல் வேண்டும்.

அப்பணியின் முதற்படியாக, "இலக்கியம்" பற்றிய ஒரு வரைவிலக்கணத்தை நிர்ணயித்துக் கொள்ளல் வேண்டும். அவ்வாறு நாம் நிர்ணயித்துக் கொள்ளும் வரை விலக்கணம் முற்போக்குவாதத்தினைக் கோட்பாடு நிலையில் எதிர்ப்பவர்களாலும் ஏற்றுக் கொள்ளப்படத் தக்கதாக விருத்தல் வேண்டும். ஏனெனில் அப்பொழுதுதான், இலக்கியத்தையும் முற்போக்குவாதத்தையும் நாம் இணைப்பது அடிப்படையில்—இலக்கியத்தின் பொதுப்பண்புகளினடியாக நோக்கும் பொழுது—தவறாகாது என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்வர். அதாவது எமது வாதங்களினை அவர்கள் ஏற்றுக்கொள்ளாவிடினும், எமது வாதத்தின் உள்ளார்ந்த தருக்கத்தை விளங்கிக் கொள்வர். திறனாய்வின் பொழுது ஒருவர், இன்னொருவரின் கோட்பாடுகளை மேற்கொள்ளவில்லையே என்பதற்காக அவரைக் கண்டித்தல் கூடாது. அவர் (அந்த ஒருவர்) தான் மேற்கொண்டுள்ள—சுயமாக வரித்துக் கொண்டுள்ள-கோட்பாட்டின்—உள்ளார்ந்த தருக்கத்தைப் பூர்ணமாக ஏற்றுக் கொள்கின்றாரா என்பதை முதலில் ஆராயவேண்டும். அடுத்த நிலையிலே அவரது கோட்பாட்டின் குறை நிறைகளை இன்னொரு கோட்பாட்டின் கண்ணோட்டத்தில் வைத்துக் கூறல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேண்டும். அதுதான் நேர்மையான திறனாய்வுக்கு - விமரிசனத்துக்கு – இடமளிக்கும்.**

அத்தகைய இலக்கணம் பற்றிய வரை விலக்கணம் அபிப்பிராய நோக்குடையதாகவல்லாது விவரண முறையானதாக அமைதல் நல்லது. இலக்கண நூலாசிரியர்கள் பெரும்பாலும் அத்தகைய வரை விலக்கணத்தையே வழங்குவர்.

இலக்கியம் பற்றிய அத்தகைய விளக்க விவரண வரைவிலக்கணத்தை டேவிட்கிறேய்க் (David craig) என்பார் வழங்கியுள்ளார்.

> "வரலாற்றில் தொழிற்படும் ஆழவேரூன்றிய சக்திகள்—அதாவது வாழ்க்கை முறை பற்றி சமூகத்தின் பல்வேறு பிரிவுகளிடையே நடக்கும் போராட்டங்கள்—வாழ்க்கை முறையை மாற்றியமைக்கின்றன. அதாவது வாழ்வதற்கென மக்கள் ஒருங்குபட்டு உழைக்கும் பொழுது தோன்றும் மக்கள் உறவுகள் மாற்றியமைக்கப்படுகின்றன. (இந்த உறவுகளுள் உளவியற் சுகவாழ்வு, பாலியல் திருப்தி முதலியவற்றுடன் உணவு, உடை, உறையுள் ஆகியனவும் இடம் பெறும்). இந்த மாற்றமைப்பு புதிய தொடர்பு முறையமைப்புக்கள் தோன்றுவதற்கு இடமளிக்கும். (இது ஒரே சார்பினரான மக்களுக்கான வாய் மொழிப் பாடலாகவோ, கலப்புச் சார்பினரான மக்களுக்கான, வணிக விநியோக நிலைப்பட்ட அச்சு முறைமை ஆக்கங்களாகவோ அல்லது வேறெதுவாகவோ இருக்கலாம்.) இதனடியாகச் சொல்லால் வெளியிடப்பெறும் (பெரும்பாலும் இசையுடனும் வரைகலையுடனும் தொடர்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைய) இலக்கியம் தோன்றும். அது, ஒரு குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட இடத்தில் வாழும் மக்களின் புதிய; வாழ்க்கைப் பிரச்சனை களை எடுத்துக் கூறுவதாக அமையும். இவ் வாறு எடுத்துக் கூறப்படுவது, தனிப்பட்ட கலைஞனது அன்றேல் கலைஞர்களது உள் ளார்ந்த, சூழலால் தாக்கப் பெற்ற, நிலை முறை களுக்கியைந்த பாணிகளிலே அமையும். அத் துடன் இவை, அச்சமுதாயத்தில், அக்காலத் திலே நிலவும் தொடர்புச் சாதனங்களுக்கேற்ற தாக, அவற்றின் வழியாக வருவனவாக அமை யும்."

இது இலக்கியம் பற்றிய விவரண பூர்வமான ஒரு விளக்கம். இது இலக்கியத்தின் சமூகத்தளம், தொடர்பு முறைமை, தொடர்புச் சாதன முறைமை ஆகிய பற்றி வற்புறுத்துகின்றது.

டேவிட் கிறேய்க் ஒரு முற்போக்குவாதி; மார்க்ஸீய வாதி. எனவே மார்க்ஸீயவாதியல்லாத ஒருவர் இலக்கி யத்தின் சமூகத்தளம் பற்றிக் கூறுவதையும நாம் இங்கு சேர்த்துக் கொள்ளல் வேண்டும். இலக்கியத்தில் முற்போக்கு வாதம், இலக்கியத்தின் சமூகத்தளமும் களமும் பற்றியே அதிக சிரத்தை காட்டுமாதலால், இலக்கியத்தின் சமூக நிலைபாட்டினை முற்போக்கு வாதத்தினை ஏற்றுக் கொள்ளாதவர்களும் ஏற்றுக் கொள்கின்றனரா என்பதனை அறிந்து கொள்ளல் வேண்டும்.

இலக்கியம் நான்கு புருடார்த்தங்களுடன் (அறம் பொருள், இன்பம், வீடு, சம்பந்தப்பட்டதாக விருத்தல் வேண்டுமென இந்தியத் தத்துவப் பாரம்பரிய மரபு வழி நின்று வற்புறுத்துவோர் இதனை ஏற்றுக் கொள்

41877

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றனர் என்பது அறம், பொருள் பற்றிய விளக்கத்தால் தெளிவாகும். அம் மரபு சாராத முற்போக்கு எதிர்ப்புவாதிகளும் இதனை ஏற்றுக் கொள்கின்றனர் என்பதற்கு ஷுக்கிங் (L. L. Schuking) என்பாரது பின் வரும் கூற்றுச் சான்றாகும்.

"இயற்கை அறிவியலில் தாவரங்களினதும் மிருகங்களினதும், பண்புகள் அவை காணப்படும் பிரதேசத்தின் தனித்துவப் பண்புகளுக்கேற்ப கண்டறிந்து விளங்கிக் கொள்ளப்படுவதுபோன்று, இலக்கிய வரலாற்றிலும் இலக்கியங்களின் இருப்பும்,வண்ணமும், தனித்துவமும் பெரும்பாலும், அந்த இலக்கிய ஆக்கம் தோன்றும் சமூக மண்வளத்திலிருந்தே அறிந்து கொள்ளப் படுகின்றது"

இலக்கியம் சமூகத்தினடியாகவே தோன்றும் என்பது எல்லோர்க்கும் ஒப்பமுடிந்த கொள்கையாகும். இலக்கியம் ஒரு கலைதான். ஆனால் சமூக மண்வளமின்றேல் இலக்கியமில்லை என்பது தெளிவாகின்றது

## ஆக்கியற் கலை என்ற வகையில் இலக்கியத்தின் பண்புகள்

இலக்கியத்தில் முற்போக்குவாதத்தினை எதிர்ப்போர் முற்போக்குச் சார்புடைய இலக்கியம் கலையமிசத்துக்கு முக்கியத்துவம் கொடாமல் கலையழகற்றபிரசார அமிசங்களுக்கே முக்கிய இடம் கொடுக்கின்றதென வாதிடுவர். முற்போக்கு இலக்கியங்களிலும் தரமான, தரமற்ற இலக்கியங்கள் உண்டு. ஆதர்ச இலக்கியங்களிலும் தரவேறுபாடுண்டு. இயலாமை எந்த ஒரு பிரிவினரதும் தனியுரிமையாகி விடாது. மேலே கூறிய குற்றச்சாட்டை மெய்ப்பிக்கும் முற்போக்கு இலக்கியங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளன. ஆனால் அவை முற்போக்கு வாதத்துக்கெதிரான சாட்சியாக அழைக்கப்படக்கூடாது. வைஷ்ணவத்தைக் கம்பன் பாடினான் வில்லிப்புத்தூராரும் தான் பாடியுள்ளார். வில்லிபுத்தூராரின் திறமைக் குறைவு வைஷ்ணவத்தின் குறைபாடு ஆகாது.

எனினும் நாம், ஆக்கியற் கலை என்ற வகையில் இலக்கியத்தின் பண்புகளைக் கண்டறிந்து கொள்ளும் (பின்னர் அதனை முற்போக்கு வாதத்துடன் இணைத்துக் கொள்ள முனையும்) இத்தருணத்தில், கலை இலக்கியத்தின் அழகியலம்சங்களுக்கே முக்கியத்துவம் கொடுத்து நோக்குவோம்.

இலக்கியத்தை ஆக்கியற் கலைகளில் (Creative Arts) ஒன்றாகக் கொள்வது மரபு எனவே முதலில், ஆக்கியற் கலைகளின் அழகியல் வழிப்பட்ட இயல்புகளை முதலில் —சுருக்கமாக—நோக்குவோம்.

கலைகள் உள்ளதான நிலைமை யொன்றினை (Reality, இது யதார்த்தத்திலிருந்து (Realism) வேறுபட்டது) ஆக்க பூர்வமாகக் குறியீடுகள் மூலமாக மீளாக்கம் (Recreates) செய்கின்றது.

இந்த மீளாக்கம், கலைஞனின் அக—புறத்தொடர்பு விளக்கம் காரணமாக, அதாவது சமூகப் பிரக்ஞையின் காரணமாக, சமூகப் பிரக்ஞையின் ஒரு வடிவமாகத் தோன்றுகின்றது.

அவ்வாறு தோன்றும் கலை வடிவத்தில் உண்மைகள் கண்டறியப்படுகின்றன. இந்த உண்மைகள் வாழ்க்கை பற்றிய ஒரு தெளிவினை—குறைந்தது ஒரு எண்ணத்தினைத்—தோற்றுவிக்கின்றது.

இந்த உண்மை/தெளிவு/எண்ணம் மெய்ப்பாட்டொருமையை வாசகர்/ கேட்போன்/ பார்ப்போனுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்துவதன் மூலமும் உந்துதல் மூலமும், ஏற் படுத்தப் படுகின்றது.

எனவே கலையின் தன்மை அது 'அநுபவ' வாயி லாக வாழ்க்கைபற்றிய உண்மைகளை தெளிவுகளை ஏற் படுத்துவது என்பதுதான் அதற்குரிய குறியீடுகள், அவற்றின் தன்மை, அவற்றின் தாக்கம் ஆகியன பற்றியும், இவற்றின் உளவியலமிசங்கள் பற்றியும் அழகியல் ஆராயும்.

மேலே கூறப்பட்ட அனுபவம், சமூக அனுபவ மாகவே இருக்கும். அது பட்டறிவின் வழியாகவும் கற்றறிவின் வழியாகவும் வரலாம்.

இலக்கியத்தைப் பொறுத்த வரையில் அது சொல்லையே குறியீடாகக் கொண்டது. சொல் எப் பொழுது குறியீடாகும்? குழந்தையின் வளர்ச்சியில் மொழி வகிக்கும் இடம் பற்றி ஆராய்ந்துள்ள அறிஞர் கள்—பியாஜே, விகொற்ஸ்கி, லூறியா போன்றோர் இது பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளனர் மனித உள்ளத்தில் கருதுகோள்கள் (Concepts) தோன்றுவதற்கு மொழி அவசியமானது. இவை அனுபவத்தினடியாக வரு கின்றன. சொற்கள் அனுபவங்களை விளங்கிக் கொள்ள எடுத்துக்கூற, மீளாக்கஞ் செய்ய உதவுகின்றன. எழுத் தாளன் /கவிஞன் அதனைப் பயன்படுத்தும் பொழுது அநுபவம் தொடர்பு வழியாக (by Communication) வாச கன்/கேட்போனிடத்து ஏற்படுத்தப்படுகின்றன.

ஏற்கனவே கூறியபடி இந்த அநுபவங்கள் சமூக நிலைப்பட்டவை; சமூக நிலைப்படுத்தப்பட்டே விளங்கிக் கொள்ளப்படுகின்றன. மேலும் அநுபவங்கள் சந்தர்ப்பங்கள், சூழல்கள் பற்றி வருவன. இவை வாழ்க்கையினடியாக வருபவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

இந்த அநுபவங்களை ஆக்க இலக்கிய கர்த்தன் எடுத்துக் கூறும்போது

(அ) மனித நிலைப்படுத்தி

(ஆ) தனி மனிதருக்குரிய உணர்வு அனுபவ நிலைப்படுத்திக்

கூறுகின்றான். எனவேதான் ஆக்க இலக்கியத்திற்கு எழுத்தாளன்/கவிஞனின் நேரடித்தொடர்பு முறைமை அல்லது பாத்திர வழிச் சித்தரிப்பு முக்கியமாகின்றது.

இங்கு நாம் ஆக்க இலக்கியம் பற்றியே பேசுகின்றோமென்பதனை வற்புறுத்த வேண்டியதில்லை.

எனவே அழகியல் வழி நோக்கினாலும் இலக்கியம் வாழ்க்கையனுபவம், அவ்வநுபவத்திற்கான பிரச்னைகள் பற்றியதென்பது தெளிவாகின்றது

## இலக்கியத்தையும் முற்போக்கு வாதத்தையும் இணைப்பதிலுள்ள மேலோட்டமான பிரச்சனைகள்

முற்போக்கு வாதம் பற்றியும், இலக்கியம் பற்றியும் தனித்தனியாக நோக்கிய நாம், அடுத்து அவற்றை இணைத்து நோக்குவோம்.

அவ்வாறு செய்வதில் சில முக்கியமான பிரச்சனைகள் உள்ளன. நாம் ஏற்கனவே கண்டறிந்த முற்போக்குவாதமானது, சமூக நிலைப்பட்டதாக, பிண்டப் பிரமாணமான வளர்ச்சி நெறி சம்பந்தப்பட்டதாக விருக்கின்றது என்பது உண்மையே. அத்தகைய முற்போக்கினை வாழ்க்கையின் அமிசங்களில், வாழ்க்கை வசதிகளின் மிகுதிக் குறைவுகளிற் கண்டு கொள்ளலாம் இம் முற்போக்குக் கருதுகோளினை கலை இலக்கியத்துக்குப் பிரயோகிக்க முடியுமா? கலையின் தோற்றத்திற்கான உந்து சக்திகள், அதன் பரிணமிப்புக்குக் காரணமான பண்புகள், அதன் ஏற்புடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைக்குக் காரணமான, 'ருசி' போன்ற பிரச்சனைகளை, சமூக முற்போக்கு அமிசங்களுடன் இணைத்து வைத்து எவ்வாறு மதிப்பிடலாம் எனும் பிரச்சனையே மேலெழுந்து நிற்கும்.

அவ்வாறு இணைக்க முடியாவிடின் சமூகப் பொது விதிகளெனக் கூறப்படுபவை கலை இலக்கியத்திற்குப் பொருத்தமற்றனவா எனும் பிரச்சனையும் தோன்றுகின்றது.

இன்னுமொரு பிரச்சனையும் தோன்றலாம். முற்போக்கு பற்றிய எமது விளக்கத்தின் பொழுது முற்போக்கு வாதம் என்பது கால வரையறைக்குள் கட்டுப்பட்டு நிற்கும் ஒரு வாதம் என்று சொன்னோம். அதாவது முற்போக்கு வாதம் வரலாற்றுப் படிநிலை பற்றியது என்பது புலனாகின்றது. அவ்வாறாயின் திருவள்ளுவர் கணியன பூங்குன்றனிலும் பார்க்கச் சிறந்த கவிஞராக விளங்க வேண்டுமென்பது புலனாகின்றது. கம்பரைவிட வில்லிப்புத்தூரார் சிறந்த புலவராக வேண்டும். கல்கியைவிட மணியன் தலை சிறந்த நாவலாசிரியராதல் வேண்டும். ஆனால் உண்மையில் நிலைமை அதுவல்ல என்பது எமக்குத் தெரியும் கலையழகின் தரத்தை மதிப்பீடு செய்வதற்கு வரலாற்று படி நிலைகள் அல்லது கால கட்டங்கள் போதிய உரைகல் ஆகா.

இத்தகைய ஒரு பிரச்சனையினை மார்க்ஸே எதிர் நோக்க வேண்டியிருந்தது. உபரிப் பெறுமானக் கொள்கைகள் (Theories of surplus Value) என்னும் நூலில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "கலையைப் பொறுத்த வரையில் அதன் கொடுமுடிகள் சில சமுதாயத்தின் பொதுவான வளர்ச்சியுடனியைபற்று நிற்பதனை நாம் காணக் கூடியதாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் அவை (கலைகள்), [சமுதாய] அமைப்பின் சட்டகம் என்று சொல்லப்படத்தக்க பொருள் உப அமைப்புடனும் அவை இயைந்து நிற்பனவன்று. உதாரணமாக நவீன தேசிய இனங்களின் இலக்கிய சாதனையுடன் கிரேக்கர்களின் சாதனையையோ அன்றேல் ஷேக்ஸ்பியருடைய சாதனையையோ ஒப்பு நோக்கும் பொழுது இது புலனாகும்" என்பர்.

கிருப்ஷென்கோ கூறுவது போன்று மார்க்ஸி னுடைய இவ்வாதத்தினைப் பலர், "மார்க்ஸ் கலையினைச் சமூக உறவுகளுக்கப்பாற்பட்ட ஒன்றாகவே கருதினார்" என்பதற்கான எடுத்துக் காட்டாகவே கொண்டன ரெனினும் பொருளாதார சமூக காலகட்ட நிலைப்பட்ட வளர்ச்சிக்கும் கலையின் தரத்துக்கும் இயைபின்மை யுண்டு என்பதை இம் மேற்கோள் காட்டுகின்ற தென் பதிற் கருத்து வேறுபாடு இருத்தல் முடியாது.

மார்க்ஸினது இம் மேற்கோள், கலை இலக் கியத்தின் தோற்றம் பற்றிய பிரச்னைகளை இது எழுப்ப வில்லை யென்பதுண்மையே. ஆனால் கலை இலக் கியத்தின் வளர்ச்சியில், சில குறிப்பிட்ட கால கட்டங் களில் சமூக பொருளாதார வளர்ச்சிக்கும் கலை, இலக்கியத் தரத்துக்கும் இயைபின்மை காணப்படு கின்றது என்பதனை அது நன்கு சுட்டிக் காட்டுகின்றது எனலாம்.

இலக்கியத்தில் முற்போக்கு வாதம் பற்றி, முற் போக்கு வாதமென்பது காலகட்ட அடிப்படையில் ஏற் படும் தரரீதியான முன்னேற்றம் என்ற அடிப்படையில் இலக்கிய வளர்ச்சி பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கும் நாம் இதற்கான அமைதியைக் காண வேண்டுவது, அத்தியாவசியமாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலை இலக்கியத்தில் முற்போக்கு நெறிகள் தோன்றும் முறைமை**

கலை, இலக்கியத் துறையில் முற்போக்குத் தெரியும் முறைமையினை தத்துவ, தர்க்க வரையறையுடன் எடுத்துக் கூற வேண்டுவது இக்கட்டத்தில் அவசியமாகின்றது.

கலை, இலக்கியத்தின் 'முற்போக்கு''க்கான உரைகல் யாது? அதாவது கலை இலக்கியத் துறையில் முற்போக்கினை இலக்கியத்தின் எந்த அமிசத்திற் காணலா மென்பதே இங்கு பிரச்சினையாகும்.

கால அடிப்படையில் இலக்கியங்களை வைத்து ஒப்புநோக்கும் பொழுது, கலை இலக்கியங்களின் உருவம், பொருளமைதியில் வேறுபாடு நிலவுவதனைக் காணக் கூடியதாக விருக்கின்றது. இலக்கியத்தின் உருவம், பொருளமைதி என்பன இலக்கியத்தில் எடுத்துக் கூறப்படும் மனித அநுபவத்தைக் கொண்டே தீர்மானிக்கப் படுகின்றதென்பது புலனுகின்றது. கலை, இலக்கியத்தில் சித்தரிக்கப்படும் அல்லது எடுத்தாளப்படும் மனித அநுபவம் காலப் போக்கில் அகன்று அகன்று செல்வதையும், அவ்வாறு இலக்கியத்தினுட் கொண்டு வரப்படும் 'அகன்ற' மனித அநுபவம், முந்திய கால கட்டங்களிற் சித்தரிக்கப்பட்ட மனித அநுபவத்திலும் பார்க்க அதிக சிக்கலுடையதாகவும், பன்முகப்பட்ட உறவுக் கோலங்களையுடையதாகவும் இருப்பதனை நாம் காண்கின்றேம். இதன் உட்கருத்து யாது? சமுதாய வளர்ச்சி நியதிக்கேற்ப, அதாவது சமுதாயத்தின் சமூக, பொருளாதார உறவுகளின் பன்முகப்பட்ட உறவுப் பரிணமிப்பிற்கேற்ப இலக்கியத்திலும், படிப்படியாக வளர்ந்து வரும் சிக்கலுறும் மனித உறவுகள் இலக்கியத்திலே எடுத்துக்

10840

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL



கூறப்படுகின்றன. இவ்வாறு கூறும்பொழுது, வேறுபட்ட கால நிலைகளில், அதுவரை இலக்கியத்திற் பேசப்படாத நிலைமையுண்மைகள் பேசப்படத் தொடங்குகின்றன. அதாவது புதிய சமூக உறவுகள் இலக்கியத்திலே பேசப்படத் தொடங்குகின்றன. இவ்வாறு சொல்வதன் கருத்து யாது? புதிய சமுதாய நிலைமைகள், மனித நிலைப்படுத்தப்பட்டு எடுத்துக் கூறப்படுகின்றன என்பதே கருத்தாகும்.

இக்கண்ணோட்டத்தில் நோக்கும் பொழுது இலக்கியங்களை, அவை சித்தரிக்கும் மனித அநுபவ வட்டம், அவ்வட்டத்தின் வரையறை கொண்டு வகுத்து விடலாமென்பது புலனாகின்றது. சமூதாய வளர்ச்சி சிக்கலுறச் சிக்கலுற சமுதாயத்தைத் தளமாகக் கொண்டு தோன்றும் இலக்கியத்திலும் சித்தரிக்கப்படும் மனித அநுபவத்தின் ஆழமும் அகற்சியும் வேறுபடுவதைக் காணலாம்.

கலை, இலக்கியத் துறையில் முற்போக்கினை இந்த மனித அநுபவச் சித்தரிப்பின் ஆழ அகற்சியில், சித்தரிக்கப்படும் சமூக நிலைமைகளின் ஆழ அகற்சியிற் கண்டு கொள்ள வேண்டுமென்பது புலனாகின்றது

இவ்வுண்மை தமிழ் இலக்கியத்திற் பரிணமிக்கும் முறைமையினைச் சிறிது நோக்குவோம். கண வாழ்வுச் சிதைவினைக் குறிப்பிடும் சங்க இலக்கியத்திலே அதிகாரப்பட்டு நிற்கும் மனித அநுபவம் எளிமையுடையதே நிலஞ் சார்ந்த ஒழுக்கம் (திணை) போர் வீரம், மன்னன் புற நலனோம்பும் பண்பு ஆகியவையே இடம் பெறுகின்றன. திணை மயக்கத்தில் அவ் இலக்கியத்திற் பேசப்படும் மனித அநுபவ வட்டம் விரிவடைவதை, அதே வேளை சிக்கலுறுவதையும் காணலாம். அக்கால கட்டத்தின் பின்னர் வரும்

நூலகம் யாழ்ப்பாணம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்த சமணக் கோட்பாடுகள். நிலவிய வாழ்க்கையின் அநுபவத்துக்கு முக்கிய இடம் கொடுக்காது, அவ்வநுபவத்தின் அறப் பெறுமானமின்மையை, அறக் கோட்பாடுகளை, அவ்வறக் கோட்பாடுகளின் சமூக முக்கியத்துவத்தை வற்புறுத்தத் தொடங்குகின்றன. இவ்வாறு அறப்பெறுமானம், அற நோக்கிற்காக மாத்திரம் வற்புறுத்தப்படுவது முந்திய இலக்கியப் பாரம்பரியத்திற் காணப்படாத ஒன்ருகையால் இலக்கியச் சுவைத் தொடர்ச்சி அறுந்து விடுகின்றது. பாரம்பரியத்தினை உள்வாங்கி முந்திய அகமுறைமையையும் புறமுறைமையையும் வள்ளுவர் அறம், பொருள், இன்பம் என்ற கட்டுக் கோப்புக்குள், இலக்கியத்திற் பேசப்படும் மனித அநுபவம் மாத்திரமல்லாது இலக்கியச் சுவையும் அகற்சியடைகின்றன அறப் பெறுமானங்களாக, அறக் கோட்பாட்டு வரையறைக்குள் நின்று கூறிய அற இலக்கியப் பொருள் (அரசியல் பிழைத்தோர்க்கு அறங் கூற்ருவது என வருபவை) மனித கற்பனைக்குள் உள் வாங்கப்பெற்று அகமும் சுவையுள்ள பாத்திரங்களின் தனி முறையான அந்தரங்க அனுபவங்களாக அதே வேளையிற் சமுதாயப் பொதுமைபைச் சுட்டும் வகையில் சிலப்பதிகாரத்தில் எடுத்துக் கூறப்படும் பொழுது (கண்ணகியின் துயரினில், மாதவியின் சுக துக்கத்தில், கோவலனின் சிக்கலான உறவுகளில் எடுத்துக் கூறப்படும் பொழுது) தமிழ் இலக்கியத்திற் சித்தரிக்கப்படும் மனித அநுபவ வட்டமும் அந்த அநுபவச் சித்தரிப்பும் அகல்வதையும் ஆழமாகச் செல்வதையும் காணலாம். பட்டினப் பாலையை அன்றேல் நெடுநல் வாடையை உறவெளிமையின் ஒரு முனையாக—முன் முனையாகக் கொண்டால் சிலப்பதிகாரம் வளர்ச்சி நெறியின் மறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனையாக மிளிர்வதைக் காணலாம். மேலே கூறிய கருத்தின்படி பார்க்கும் பொழுது, சிலப்பதிகாரம் தமிழ் இலக்கியத்தின் முற்போக்குப் படிநிலையினைச் சித்தரிக்கின்றது என்பது புலனாகின்றது. நெடுநல்வாடையை அல்லது பட்டினப் பாலையைக் கிளைவிடாத மரத்தின் புஷ்பமென்றால், சிலப்பதிகாரம் கிளைவிடத் தொடங்கும் மரத்தின் புதிதாகத் தோன்றிய கிளையின் மலர்க்கொத்து என்பது புலனாகும்.

இவ்வாறே பல்லவர் காலத்து இலக்கியங்களை சம்பந்தர், ஆண்டாளை அடிப்படையாகக் கொண்டும்; சோழர் காலத்திலே சிக்கலுறும் சமூக உறவுகளை, கம்பனின் பல்வேறு பாத்திரங்களையும் அவற்றின் முரண்பாடுகளைக் கொண்டும் விளக்கிச் செலலலாம் அடுத்து வரும பள்ளு, குறவஞ்சி ஆகியன முற்றிலும் புதிய அநுபவ மலாகளாக அமைகின்றன. இவையா வற்றையும் ஒருங்கு சேர வைத்து நோக்கும் பொழுது, தமிழ் இலக்கியத்தில் மனித அநுபவச் சித்தரிப்பு அகலமாகவும் ஆழமாகவும செல்வதைக் காணலாம். அரசியற் சனநாயகம், இலக்கியச் சனநாயகமாக மாறுகின்ற பொழுது இலக்கிய அநுபவம் அடி நிலை மக்களின் அநுபவமாக மாறுவதைக் காணலாம். நாவல் இலக்கிய வரலாற்றினை மாத்திரம் கொண்டு நோக்கும் பொழுதுகூட நாவல்களில் பல்வேறு கட்டங்களில் மனித அநுபவம் அகலமாகவும் ஆழமாகவும் செல்வதை வேதநாயகம் பிள்ளை, ராஜம் ஐயர், ஜானகிராமன், ரகுநாதன், ஜெயகாந்தன், செல்வராஜ், இந்திரா பார்த்தசாரதி, ராஜநாராயணன் ஆகியோரது ஆக்கங்களிற் காணலாம். இலங்கையில் இப்பரிணாமத்தை கசன, இராசரத்தினம் பொன்னுத்துரை, டானியல், அருள் சுப்பிரமணியம ஆகியோரிற்காணலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே கலை, இலக்கியத்தில் முற்போக்கினை மனித அநுபவ அகற்சி ஆழத்தில், அதற்கான சித்தரிப்பிற் கண்டு கொள்ளலாமென்பது புலனாகின்றது.

மனித அநுபவச் சித்தரிப்பு, முன்னரிருந்ததிலும் பார்க்க அகட்டி ஆழமாக்கப்படுவதற்கு மனித அநுபவத்தின் சமூகப் பின்னணி பற்றிய தெளிவுடைய ஆக்க இலக்கிய கர்த்தன் அவசியமாகின்றான். முற்போக்கின் தன்மை, குறிப்பிட்ட சமூக - பொருளாதாரக் கட்டமைவினாலே தீர்மானிக்கப்படுமொன்றாகையால், ஒவ்வொரு கட்டத்திலும் இந்த அகற்சி ஆழத்தினை இலக்கியத்திலே சாதிப்பவன் இலக்கியத்தின முற்போக்கான வியாப்திக்கு வழி வகுப்பவனாகின்றான்.

கற்பனைக்குள் உள்வாங்கப் பெற்று மனித நிலைப் படுத்தப்பட்டுக் கூறப்படும், சமூக வளர்ச்சிப்படி நிலைக் கேற்பச் சிக்கலுறும் மனித அநுபவ ஆழ்ந்த அகன்ற சித்தரிப்புப் படி நிலைகளிலே இலககியத்தின் முற்போக்குப் படிநிலைகளைக் கண்டு கொள்ளலாம் என்ற தரவு சில தவறான முடிவுகளுக்கும் இடம் கொடுக்கலாம்.

இந்தத் தரவினைக் கொண்டு இலக்கியப் பரப்பில், முதன் முறையாக ஒரு பொருளை எடுத்துக் கூறும் எந்த இலக்கியமும் இலக்கியத்தின் முற்போக்குப் படிநிலையாகிவிடலாம் என்ற ஒரு கருத்தும் தோன்ற இடமுண்டு. கலை, இலக்கியத்தில் முற்போக்கினை, எடுத்துக் கூறப் படும் பொருளின் புறப்புதுமை கொண்டோ, அன்றேல், புதிய ஒரு விடயம் பற்றிய நவ விவரணத்தைக் கொண்டோ தீர்மானித்துவிடுதல் கூடாது. கலை இலக்கியத்தில் முற்போக்கின் முகிழ்ப்பினை, இவ்வாறு எடுத்துக் கூறப்படும் பொருள், அல்லது அகட்டி, ஆழமாக்கப் பெறும் மனித அநுபவம் சூழ உள்ள நிலைமையினை பொதுமைப்படுத்தி விளக்குவதில் எத்துணை புலமை

1u840

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யையும் தனித்துவத்தையும் கொண்டுள்ளது என்பதி லேயே கண்டு கொள்ளல் வேண்டும். சித்தரிப்பிற் காணப்படும் புலமையும், (ஆழ்ந்த, தெளிந்த, ஆக்கியற் றிறனே இங்கு புலமை என்று குறிப்பிடப்படுகின்றது. அந்தப் புலமைக்கேயுரிய கலை நிலைத்தனித்துவமுமே இலக்கியத்தில் முற்போக்குப் படிநிலையை நிலைநிறுத்தக் கூடியதாகும். அவ்வாறு புலமையுடனும், தனித் துவத்துடனும் தோற்றுவிக்கப்பெறற ஆக்கம், அழகி யற்றுறையிலும், ஆத்மார்த்தப் பெறுமானத்திலும் பெறும் பூரணத்துவம் கொண்டே அவ் வாக்கத்தின் இலக்கியப் பெறுமானம் நிலை நிறுத்தப்படுமென்பதனை இங்கு மீள வலியுறுத்த வேண்டிய அவசியமில்லை.

இந்நிலையில், பொருள் முதல் வாதத்தை (லோகாய தத்தை) அடிப்படையாகக் கொண்ட முற்போக்கு வாதத்தில்—குறிப்பாக மார்க்ஸீய வாதத்தில்— ஆத்மார்த்தத்துக்கு இடமிருக்க முடியாது என வாதிப் போருளர். மார்க்ஸீயம் உடம்பும் ஆன்மாவும் வேறு வேருனவையென்பதை ஏற்றுக் கொள்வதில்லை. ஆனுல் மனிதனது ஆத்ம உயிர்ப்பை (human spirit) அது ஏற்றுக் கொள்கிறது அந்த உயிர்ப்பு சடப்பொருட் சேர்க்கையினுல் ஏற்படும் உணர்வு நிலையென்பது அதன் வாதம். மனிதனது சடநிலை வாழ்க்கைப் பூரணத்துவத்திலேயே ஆத்ம உயிர்ப்புப் பூரணத்துவ மும் (Spiritual fulfilment) உண்டு என்பது அதன் வாதம். இந்துக் கோட்பாடுகள் பலவற்றில் சடப்பொருட் பூரணத்துவம் பற்றிப் பேசப்படுவதில்லை. அத்துடன் ஆத்ம பூரணத்துவம் உடலுக்குப் புறம்பானது என்றும் அவை நிறுவும்.

இவற்றை மார்க்ஸீயம் ஏற்பதில்லை. மார்க்ஸீய வாதமென இன்று எடுத்துப் பேசப்படுபவை பெரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலும் மார்க்ஸீயத்தின் அரசியல் ஆற்றுப்படையமிசத்தை வற்புறுத்துவதால், மனிதப் பூரணத்துவம பற்றிய மார்க்ஸீயக் கொள்கை பற்றி அதிக கவனஞ் செலுத்தப்படுவதில்லை. மார்க்ஸ் கூறும் சமதர்ம, பொதுவுடைமை ஆட்சி நிலைகள் யாவும் மனிதன் தனது ஆற்றற் பூரணத்துவத்தை சிக்கலும், குறைபாடுகளுமின்றிப் பெறுவதற்கான புறச்சூழலை நிறுவுவனவே. அத்தகைய சமூக இருக்கை நிலையில தோன்றும் மனிதப் பூரணத்துவத்தை லௌகீக, ஆத்மார்த்த இணை நிலையை மார்க்ஸ் "ப்ருச்ஸிஸ்" (Parxis) என விளக்குவர். ஆயினும் மார்க்ஸீயத்திற் பேசப்படும் ஆத்ம உயிர்ப் புணர்வின் ஊட்டத்துக்கும் பூரணத்துவத்துக்கும் மதக் கோட்பாடுகள் அவசியமற்றவை. மதத்தை முக்கிய மனித நிறுவனங்களுள் ஒன்ருகக் கொள்ளும் மார்க்ஸ், மனித விமோசனத்துக்கு மனிதத்துவத்தின் பூரணத் துவமான பிருக்ஸிஸிறகு மதம் பயன்படாது என்பர்.

எனவே மீள வலியுறுத்தும் வகையில் "எந்த ஒரு இலக்கிய ஆக்கம், தனது சொற்குறியீடுகள் மூலம் புலமை சார்ந்த ஆக்கியல் தனித்துவ முறைமையில் சூழவுள்ள நிலையை பொதுமைப்படுத்தி எடுத்துக் கூறுகின்றதோ, அந்த இலககியம் முறபோக்குத் தன்மையினைக் கொண்டது" எனக் கூறலாம்.

இத்தகைய இலக்கிய ஆக்கத்தினைத் தோற்றுவிப்பவன, ஆககியல வல்லமையுடையவனுக விருப்பான் என்பது சொல்லாமலேயே தெரிய வரும். ஆக்கியல் ஆளுமையின் (Creative Personality) சார்பு கொண்டே ஆக்கத்தின் இயல்பு சிறக்கும். மனித அநுபவச் சித்தரிடபின் ஆழ்வு அகற்சியினுல் சமுதாய விளக்கத்தில் ஒரு புதுப்படி நிலையை நிறுவும் அல்லது சமுதாய விளக்கத்தைச் செம்மைப்படுத்தும் ஆக்கியற் கர்த்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL



னின் வெற்றிச் சாதிப்பிலே இலக்கியத்தின் வெற்றி, அதன் முற்போக்கான வளர்ச்சி தொக்கி நிற்கும். உலக நோக்கும், ஆக்கத்திறனும், மரபுத்தாடனமும், புதிதாக்கத் தீட்சண்யமுமில்லாதவனுல் இச்சாதனையை பூரணமாக நிறைவேற்ற முடியாது.

ஆகவே முற்போக்கு வாதம் இலக்கியத்தில் நிலை நிறுத்தப்படுவதற்குச் சமுதாய நோக்கும் கலைத்திறனும் இணைபிரியா வகையில் முக்கியமாகின்றன.

## இலக்கிய இயக்கமும் முற்போக்கு வாதமும்

இத்தகைய முற்போக்த இலக்கியம் ஓர் இலக்கிய இயக்கத்திற்கே கால்கோளாக அமைந்துவிடும்.

ஒரு சமுதாயத்தில் வாழும் மக்களிடையே முக்கியத்துவமுடைய மாற்றங்கள் ஏற்படும் பொழுதும், அத்தகைய மாற்றங்கள் அத்தியாவசியமானவையென முற்போக்காளர் சிந்தனையில் தெளிவு ஏற்படும் பொழுதுமே உண்மையான புதிய இலக்கிய இயக்கம் தோன்றும். அந்தப் புதிய இலக்கிய இயக்கம் மனித அநுபவத்தின் ஆழ்ந்தகன்ற இலக்கியச் சித்தரிப்புக்கு வழிகோலுவதன் மூலம், சமூகப் பிரக்ஞையின் முனைப்புக்கு வழிகோலும்.

அரசியல் ஜனநாயகம் இலக்கிய ஜனநாயகத்துக்கு வழிகோலியுள்ள, வழிகோலும் இக் காலகட்டத்தில், பொது மக்களின் அநுபவச் சித்தரிப்பு, அவர்களது சுக துக்க, இலட்சியச் சித்தரிப்புக்கள் இலக்கியத்தில் இடம் பெற வேண்டியது காலத்தின் தேவையாகும்.

இக் கால கட்டத்தில் யதார்த்தம் (realism) முக்கிய இடம் பெறுவது இயல்பே. நிகழ்வுகள் யாவும் உண்மையாகா. நிகழ்வுகளின் அர்த்தத்தை விளங்கிக் கொள்வதாலும், விளக்கிக் கொள்வதாலும்தான் உண்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான தெளிவு பிறக்கும். அந்தத் தெளிவு சமுதாய வளர்ச்சியின் அடுத்த படிக்கு எம்மை இட்டுச் செல்வதாகவிருக்கும்.

எனவே யதார்த்தம் ஆக்கியற் கர்த்தனின் ஆயுதமாகவும் வாசகனின் வழித் துணையாகவும் விளங்கும்.

இதுவே இன்றைய நிலையாகும் நாளைய நிலையை சோஷலிஸ யதார்த்தம் சுட்டிக் காட்டும்.

இப்பெரும் பணியைச் சாதிக்க முனையும் எழுத்தாளனிடமிருந்து அறிவு நேர்மையும், சமூக அர்ப்பணமும் முற்று முழுதாக எதிர்பார்க்கப் படுகின்றன.

## தமிழில் முற்போக்கு இலக்கிய இயக்கங்கள்

முற்போக்கு இலக்கியத்தின் தன்மை அவ் இலக்கிய நெறியை மேற்கொள்வோரிடத்தே ஓர் இயைபையும் இயக்க ஒருமைப்பாட்டையும் வேண்டி நிற்கும். ஏனெனில் முற்போக்கு இலக்கியம் தன்னுள் தான் முடிந்த முடிபாக நிற்கும் ஒன்றல்ல. நிலவும் சூழ்நிலை பற்றிய தெளிவு, வரவிருக்கும் சூழ்நிலை பற்றிய தீட்சண்யம் ஆகியன முற்போக்கு எழுத்தாளரிடத்தே எதிர்பார்க்கப் படுவதால், அவ் வாதத்தை மேற்கொள்ளாத எழுத்தாளரிடையேயுள்ள ஒருமைப்பாட்டினை விட அதிக இயைபினை அத்தியாவசியப் படுத்துகின்றது. அத்துடன் இளஞ்சந்ததியினரான அந்நெறி சார்ந்த ஆக்க இலக்கிய கர்த்தர்களை இணைத்து நடத்துவதற்கும் ஸ்தாபன ரீதியான அமைப்பு அத்தியாவசியமாகின்றது. எனவேதான் முற்போக்கு எழுத்தாளர் ஸ்தாபனங்கள் தோன்றுவது அவ் வாதத்தின் அகத்தர்க்க நிலையாகின்றது.

அகில இந்திய நிலையில் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் 1936இல் நிறுவப்பட்டதன் பின்னர் அவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியக்கம் இந்திய வியாப்தி பெறவே தமிழ்நாட்டிலும் முற்போக்கு எழுத்தாளர் இயக்கம் தோன்றிற்று. அகில இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தமிழ் எழுத்தாளர் பிரிவாக இச் சங்கம் 1948ஐ அடுத்து நிறுவப் பெற்றதென்பர். இலங்கையில் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் 1946 ல் நிறுவப் பெற்றது. தமிழ் நாட்டு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் முதல் தலைவராக நாரண துரைக்கண்ணன் விளங்கினார். 1948-49க்குப் பின் தமிழ் நாட்டில் முற்போக்கு இலக்கிய இயக்கம் பெரிதும் வளரமுடியாத சூழ்நிலை ஏற்பட்டது. 1954இன் பின்னர் கலை இலக்கியப் பெருமன்றம் முகிழ்த்தது. பொதுவுடைமைக் கட்சியின் பிளவின் பின்னர் கலை இலக்கியப் பெருமன்றம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினைச் சார்ந்த நிறுவனமாக இயங்கிற்று. மக்கள் எழுத்தாளர் சங்கம் எனும் அமைப்பு சென்னையில் சில ஆண்டுகள் நடைபெற்றது. அதன் பின்னர் 1975 அளவில் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பில் ஸ்தாபன ரீதியாக அமைக்கப் பெற்றது. முற்போக்கு இலக்கிய வாதத்தின் தமிழகத்து நிறுவனங்களாக இப்பொழுது முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் கலை இலக்கியப் பெருமன்றமும் இயங்கி வருகின்றன.

தமிழ் இலக்கியத்தினைச் சமுதாயக் கண்ணோட்டத்தில் நோக்கும் பண்பினை வளர்த்துள்ள பெருமை தமிழ் முற்போக்கு இலக்கிய இயக்கங்களையே சாரும்.

அத்துடன் சமுதாய வளர்ச்சியை ஆக்கபூர்வமாக எடுத்துக் காட்டும் நவீன இலக்கியங்கள் பல தோன்றுவதற்கும் முற்போக்கு நெறி சார்ந்த எழுத்தாளர்களுமே முக்கிய காரணராக, அமைந்தனர்.

மூர் வீதி கிளை நூலகம்
யாழ். மாநகர சபை
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இலக்கியத்தைச் சர்வதேச இலக்கியத்துடன் இணைத்து நோக்கும் பணியிலும் இவர்கள் பணி கணிச மானதாகும். இப்பணி காரணமாக தமிழில் பல மொழி பெயர்ப்பு நூல்கள் தோன்றின இத் துறையில் ரகு நாதனின் பணி மிக முக்கியமானதாகும்.

தமிழிலிருந்து பிற மொழிகளில், குறிப்பாக ஐரோப்பிய, சோவியத் மொழிகளிற் பெயர்க்கப்பட்ட இலக்கியங்களிலும் முற்போக்கு இலக்கிய கர்த்தர் களின் ஆக்கங்களே பெரும்பான்மையினவாகும்.

தமிழிற் சமுதாய நோக்கை வளர்த்த அதே வேளை யில், தமிழைச் சர்வதேச இலக்கிய இயக்கத்துடன் இணைத்து, உலகப் பொதுவான இலக்கியச் செல்நெறி களைத் தமிழிற் பிரதிபலிக்கவும் தமிழைப் பிறமொழி இலக்கியங்களிற் கொண்டு செல்லவும் முற்போக்கு நெறி சார்ந்த எழுத்தாளர்களே காரணராக இருந் துள்ளனர்.

## இக்கட்டுரையாக்கத்திற்கு உதவிய நூல்கள்


David Craig (Ed.) — Marxists on Literature. Penguin Book - London-1977.

Krapchenko, M. — The writer's Creative Individuality and the Development of Literature. Progress Publishers – Moscow-1977.

Schucking, L.L. — The Sociology of Literary Taste. Routledge and Kegan Paul. London - 1966.

Yuri Barabash — Aesthetics and Poetics. Progress Publishers, Moscow-1977

சிவத்தம்பி, கா. — ஈழத்தில் தமிழ் இலக்கியம். தமிழ் புத்தகாலயம், சென்னை - 1978.


10849
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாட்டாளிகள்

## வெளியீடு

| | |
|---|---|
| **முறையீடு (கவிதைகள்)** | |
| ஏ. தெ. சுப்பையன் | ரூ. 2 00 |
| **இலக்கியமும் திறனாய்வும்** | |
| டாக்டர் க. கைலாசபதி | மறுபதிப்பு அச்சில் |
| **கவிதை நயம்** | |
| க கைலாசபதி, இ. முருகையன் | ரூ. 5 00 |
| **பிணந்தின்னிகள்** | மறுபதிப்பு அச்சில் |
| **நினைவுகள் அழிவதில்லை** | |
| நிரஞ்சனா | ரூ. 10 00 |
| **இந்திய வரலாறு** | |
| இ.எம்.எஸ். நம்பூதிரிபாட் | மறுபதிப்பு அச்சில் |
| **லெனினிசத்தின் அடிப்படை அம்சங்கள்** | |
| ஜே வி ஸ்டாலின் | ரூ. 4 50 |
| **சமூக சேவகி சேரிக்கு வந்தாள்** | |
| தணிகைச் செல்வன் | மறுபதிப்பு அச்சில் |
| **ஒப்பியல் இலக்கியம்** | |
| டாகடர் க கைலாசபதி | ரூ 10 00 |
| **மேதின வரலாறு** | |
| அலெக்சாண்டர் ட்ராச்டென்பெர்க் | ரூ. 1 00 |
| **புதிய ஜனநாயகம்** | |
| மா சே-துங் | ரூ. 2 00 |
| **ஸ்தாபனத்தைப் பற்றி...** | |
| ஜே வி ஸ்டாலின் | ரூ 1 00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA-
JPL

# வெளிவர இருக்கும்

## சிறந்த சமூக இயல் நூல்கள்

சினிமா ஒரு பார்வை
மிருணாள் சென்

இயக்க இயல் வரலாற்றியல் பொருள் முதல்வாதம்
ஜே. வி. ஸ்டாலின்

மனிதர்கள் விழித்துக் கொள்ளும் போது...
கோதாவரி பருலேகர்

இயக்கமும் இலக்கியமும் (முதல் பாகம்)
டாக்டர் கா. சிவத்தம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிவர இருக்கும்

## புரட்சிகர வரலாற்று நூல்கள்

**சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறு**
(போல்ஷ்விக்)

**நவ சீனப் புரட்சியின் வரலாறு**
ஹோ கான்-சி

KOHA JPL

பொது நூலகம் 10840

41877

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10840

மூர் வீதி கிளை நூலகம்
யாழ். மாநகர சபை
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org